Thiruporur Perur aatchi (Local Panchayat)

# திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல் முறை ஆணைகள்

## முன்னிலை: திரு.மா.கேசவன்

ந.க.எண்.122/2010 கட்டிட உரிமம் எண்.01/2011-12 நாள்.05.05.2011

பொருள் : கட்டிட உரிமம் - திருப்போரூர் பேரூராட்சி - பேரூராட்சிக்குட்பட்ட காலவாக்கம் கிராமம் புல எண். 192/1, 159/2பி, 195/1ப, 2ப3 ௲ 194/1,2,3ல் 28743.12 ச.மீ பரப்பு மனையில் ஒப்புதல் மற்றும் பிளாக் A முதல் E வரை ஸ்ட்டில்ட் தளம் முதல் 16 தளங்கள் மற்றும் F பிளாக்கில் ஸ்ட்டில்ட் தளம் முதல் 9 தளங்கள் வரை 732 மொத்த குடியிருப்புக்கள் 71684.79 ச.மீ கட்டிடங்கள் கட்ட திருவாளர்கள். மார்க் ப்ராப்பர்ட்டீஸ், சென்னை அவர்களுக்கு நிபந்தனை விதித்து அனுமதி வழங்குதல் குறித்து.

பார்வை :

1. திருவாளர்கள் மார்க் ப்ராப்பர்ட்டீஸ் நிறுவனத்தின் கடிதம்
2. நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்கள் ந.க.31976/10/சிபி நாள்.08.03.2011
3. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.661/2010/மாஉதிகு நாள்.20.04.2011
4. திருவாளர்கள் மார்க் ப்ராப்பர்ட்டீஸ் நிறுவனத்தின் கடிதம் நாள்.28.04.2011
5. இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.65/2011நாள்.28.04.2011
6. ரசீது இரசீது எண்.192/2011-12 நாள்.05.05.2011
7. உரிய பிற ஆவணங்கள்.

-----

திருப்போரூர் பேரூராட்சிக்குட்பட்ட காலவாக்கம் கிராமம் புல எண்.192/1, 159/2பி, 195/1ப, 2ப3 ௲ 194/1,2,3ல் 28743.12 ச.மீ பரப்பு மனையில் ஒப்புதல் மற்றும் பிளாக் A முதல் E வரை 5 பிளாக்குகளில் ஸ்ட்டில்ட் தளம் + 16 தளங்கள். பிளாக் Fல் ஸ்ட்டில்ட் தளம் + 9 தளங்கள் மொத்தம் 6 பிளாக்குகளில் 732 குடியிருப்பு கட்டிடம் கட்ட 71684.79 ச.மீ பரப்பு கட்டிடங்கள் கட்ட பார்வை 1ல் காணும் மனுதாரர் திருவாளர்கள்.மார்க் ப்ராப்பர்ட்டீஸ், சென்னை நிறுவனத்திற்கு மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் 122வது கூட்ட தீர்மானம் எண்.3 நாள்.19.01.2011ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதை நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை பார்வை 2ல் காணும் உத்தரவில் அங்கீகரிக்கப்பட்டு (கவ ந.உ.இஎண்.38/2011) அதனை உறுப்பினர் செயலர்,



Scanned by CamScanner

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், செங்கற்பட்டு அவர்கள் பார்வை 3ல் அனுமதி அளித்தும் (மனைக்கு மவ/மாஉதிகுஎண் 09/2011 மற்றும் கட்டிடத்திற்கு திட்ட அனுமதி எண்.18/2011) வரப்பெற்ற திட்டத்தைஇப்பேரூராட்சி மன்றம் தீர்மானம் எண்.65/2011 நாள்.28.04.2011ல் கட்டணம் வசூலித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டவாறு பார்வை 6ன்படி கட்டிட உரிமம் கட்டணம் ரூ.65,26,569/- மனை ஒப்புதல் கட்டணம் ரூ.7,32,000/-ம் காலிமனைவரி (12 அரையாண்டிற்கு) ரூ.7,42,584/- நூலகவரி 74256/- மொத்தம் ரூ.80,75,409/- வசூலிக்கப்பட்டது.

பார்வை 2 மற்றும் 3ன் நிபந்தனைகள் மற்றும் கீழ்காணும் சிறப்பு நிபந்தனை 1 மற்றும் நிபந்தனைகள் (1 முதல் 18 வரை) விதிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

## சிறப்பு நிபந்தனை

1. மனுதாரரின் 28.04.2011ல் அளிக்கப்பட்ட உத்திரவாதம், EIA Clearance திட்ட கட்டுமானபணி 15000 சமீ பணிமுடிக்கும் முன் அல்லது மொத்த பணியில் 5ல் ஒருபகுதி முடியும் முன்சான்று பெற்று ஒப்படைக்க வேண்டும், பணி முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் உறுதி அளிக்கும் வகையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இவ்வனுமதி அறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

## நிபந்தனைகள்.

1. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழும செங்கற்பட்டு அவர்களின் ந.க.எண்.661/2010/மாஉதிகு நாள்.20.04.2011ல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்

2. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 31976/ 10/சிபி நாள்.08.03.2011ல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்.

3. கட்டிடங்கள் பொது கட்டிடங்களுக்கு உள்ள நிபந்தனைகளின்படி கட்டிடங்கள், திறந்தவெளி அமைப்புகள் உள்ளபடி கட்டப்பட வேண்டும்.

4. இந்த அனுமதி ஆணை தவறான தகவலின் பேரில் பெற்றுக்கொண்டு இருந்தாலும், நிபந்தனைகள் மீறி நடந்தாலும் அறிவிப்பின்றி ஒப்புதல் ஆணை ரத்து செய்யப்படும்.



Scanned by CamScanner

5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அளவுகள் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதல் இருப்பின் தனியாக அனுமதி பெறப்பட வேண்டும்.

6. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் 2010 ஆண்டுவரை திருத்த சட்டத்தில் உட்பிரிவுகளின்படியும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினுள் அரசினரால் சிறப்பு கட்டிங்கள் விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிடம் அமைய வேண்டும்.

7. கட்டிட வேலைகள் நடக்கும்பொழுதோ அல்லது பேரூராட்சி அலுவலர்கள் ஆய்வு செய்யவரும்போது அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வேலை நடைபெறுமிடங்களில் வைத்திருக்க வேண்டும்.

8. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியனை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

9. அனுமதியில் உள்ளவாறு கட்டிடங்கள் கட்டி முடித்தபிறகு பேரூராட்சி செயல்அலுவலருக்கு மனுதாரர் அறிக்கை எழுத்தூர்வமாக தரப்படவேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை மனுதாரர் சொந்தசெலவில் இடத்திற்குள்ளே நிறுத்தி சுத்திகரிப்பு அமைப்பு மூலம் கழிவுநீர் மாசு ஏற்படுத்தப்படாமல் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

11. சிறப்பு கட்டிட வளாகத்தில் சேகரமாகும் மக்கும் குப்பைகள் எருவாக்கம் செய்தல் மற்றும் மக்காத குப்பைகள் திடக்கழிவு மேலாண்மை விதிகள்படி கையாள வேண்டும்.

12. சூரியஒளி பயன்பாடு அமைப்புகள் அனுமதியளித்த இடத்தில் உரிய எண்ணிக்கை பொறுத்தப்பட வேண்டும்.

13. கட்டிட வளாகத்தினுள் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தி பணி முடிவு அறிக்கையுடன் புகைப்படங்கள் பேரூராட்சிக்கு அளிக்கப்பட வேண்டும்.



Scanned by CamScanner

14. கட்டிட அனுமதி அங்கீகரிக்க இப்பேரூராட்சி மன்றம் நிர்ணயம் செய்த கட்டணம் வசூலிக்கப் பட்டுள்ளது. தணிக்கையில் வசூலிக்கப்பட்ட கட்டணம் குறைவு என சுட்டிகாட்டப்படடால் அக்கட்டணம் உடன் மனுதாரர் செலுத்தப்பட வேண்டும்.

15. வரைபடத்தில் உள்ள கட்டிடங்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. இதை தவிர கட்டிடங்கள் கட்டப்பட்டால் அதற்கான அனுமதி பெற்றுதான் பணி துவக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

16. இந்த கட்டிட உரிமம் பெறப்பட்டதை முன்னிருத்தி அரசு நில ஆர்ஜீதம் நடவடிக்கை தடை பெறவோ, எந்த நீதிமன்றத்திலும் எந்தவித நஷ்டஈடு கோரிட பயன்படுத்த முடியாது.

17. சிறப்பு கட்டிட பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவது மனுதாரரின் பொறுப்பு.

18. வாகனம் நிறுத்தகத்தில் அனுமதிக்கப்பட்டதைவிட கூடுதலாக வாகனங்கள் நிறுத்தப்படவோ வேறு பொது இடங்களில் வாகனங்கள் கட்டிட அனுபவதாரார்கள் நிறுத்தப்பட கூடாது.

செயல் அலுவலர்
திருப்போரூர் பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்.

பெறுநர்

திருவாளர்கள் மார்க் ப்ராப்பர்ட்டீஸ்,
ப 3/418 பழைய மாமல்லபுரம் சாலை, கொட்டிவாக்கம்,
சென்னை - 41.

நகல்

1. உறுபினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் செங்கற்பட்டு அவர்களின் தகலுக்காக அனுப்பப்படுகிறது.

2. ஆணையர், நகர் ஊரமைப்பு, சென்னை அவர்களின் தகலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.



Scanned by CamScanner

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை சென்னை-600 002
முன்னிலை: திரு பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப.,
www.tn.gov.in/dtcp
email id: dtcp@vsnl.net

ந.க.எண். 31976/2010 சிபி

நாள்:08.03.2011

பொருள்: பலமாடி தொகுப்பு கட்டடம்- மாமல்லபுரம் உள்ளூர் திட்டப்பகுதி - காஞ்சிபுரம் மாவட்டம் - செங்கல்பட்டு வட்டம் - திருப்போரூர் பேரூராட்சி - காலவாக்கம் கிராமம் - ச.எண். 159/2பி, 192/1; 194/1,2,3; 195/1ப, 2ப, 3-ல் 28743.12 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு மனை ஒப்புதல் - பிளாக் A முதல் E, stilt தளம், முதல் தளம் முதல் 16-ஆம் தளம் வரை மற்றும் பிளாக் F, stilt தளம், முதல் தளம் முதல் 9-ஆம் தளம் வரை குடியிருப்பு உபயோகக் கட்டடம் - கட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர், Marg Properties கடிதம் நாள்: 28.10.10, 12.11.10 மற்றும் 13.12.1[illegible]
2. திருப்போரூர் பேரூராட்சி, செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 122/10 நாள். 30.08.10
3. உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண். 661/2010/மாஉதிகு நாள்: 24.12.2010
4. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 9278/2007பிஏ1, நாள்:16.09.09
5. அரசாணை (நிலை) எண். 161, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 9.9.2009
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09 பிஏ2 நாள்: 16.4.09

***

**உத்தரவு:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மாமல்லபுரம் உள்ளூர் திட்டப்பகுதி திருப்போரூர் பேரூராட்சி, காலவாக்கம் கிராமம், ச.எண். 159/2பி, 192/1; 194/1,2,3; 195/1ப, 2ப, 3-ல் 28743.12 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு A to R என எல்லையிட்டு திட்ட விதி 15(1)-ன் படி மனையிட ஒப்புதலும், அம்மனையில்

| | | | பரப்பளவு சதுரமீட்டரில் | |
|---|---|---|---|---|
| Block - A | | | | |
| Stilt | - | 987.72 | | |
| 1to 13th floor | - | 98[illegible] x 13 | - 12840.36 | 15504.73 |
| 14th floor | - | 978.99 | | |
| 15th floor | - | 933.37 | | |
| 16th floor | - | 752.01 | | |

Scanned by CamScanner

Block - B

| | | | | |
|---|---|---|---|---|
| Stilt | - | 767.94 | | |
| 1 to 12th floor | - | 767.94X12 | - 9215.28 | |
| 13th floor | - | 767.94 | | 11988.47 |
| 14th floor | - | 749.06 | | |
| 15th floor | - | 736.81 | | |
| 16th floor | - | 519.38 | | |

Block - C

| | | | | |
|---|---|---|---|---|
| Stilt | - | 860.53 | | |
| 1to13th floor | - | 860.53X13 | - 11186.89 | 13536.19 |
| 14th floor | - | 864.23 | | |
| 15th floor | - | 861.81 | | |
| 16th floor | - | 623.26 | | |

Block - D

| | | | | |
|---|---|---|---|---|
| Stilt | - | 823.24 | | |
| 1to13th floor | - | 823.24X13 | - 10702.12 | 12949.33 |
| 14th floor | - | 827.22 | | |
| 15th floor | - | 776.36 | | |
| 16th floor | - | 643.63 | | |

Block - E

| | | | | |
|---|---|---|---|---|
| Stilt | - | 683.27 | | |
| 1to13th floor | - | 683.27X13 | - 8882.51 | 10797.31 |
| 14th floor | - | 683.27 | | |
| 15th floor | - | 683.27 | | |
| 16th floor | - | 548.26 | | |

Scanned by CamScanner

Block - F

| | | | |
|---|---|---|---|
| Stilt | - | 767.64 | 6908.76 |
| 1to9th floor | - | 6908.76 (767.64X9) | |

Total F.S.I Area - 71684.84 சதுரமீட்டர்
OSR Area - 2878 சதுரமீட்டர் முதலியவை உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு திட்ட விதி 8(viii)ஐ தளர்த்தி மனை ஒப்புதல் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி, திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.38/2011 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. EIA Clearance சான்று பெற்றுக் கொண்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
2. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை, தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.
4. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு, அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன் படி செப்டிக் டேங்க்கில் " U " Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கெனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல் /உட்பிரிவு நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் ஆகியவை உள்ளூர் திட்டக் குழுமத்தால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்கள் மேற்கொண்டு உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

Scanned by CamScanner

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் உறுப்பினர் செயலர் (பொ), அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்)/-பங்கஜ் குமார் பன்சல்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

<u>இணைப்பு:</u>

மூன்று தொகுப்பு வரைபடங்கள்
(3X44)

<u>பெறுநர்</u>

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம்

<u>நகல்:</u>

1. செயல் அலுவலர்
   திருப்போரூர் பேரூராட்சி
   காஞ்சிபுரம் மாவட்டம்
2. Marg Properties
   4/318 Rajiv Gandhi Salai
   Kottivakkam, Chennai

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

த. தெய்சிராய்.
கண்காணிப்பாளர்

Scanned by CamScanner

நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்
807, அண்ணா சாலை, சென்னை-2

ந.க.எண்.7205/2019/சிபி

நாள். 30.04.2019

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், காலவாக்கம் கிராமம், சர்வே எண்கள்.159/2B; 192/1; 194/1,2,3; 195/2, 3, ஆகியவற்றில் 28743.12 சமீ மனைப்பரப்பில் பிளாக்-A முதல் E வரை ஸ்டில்ட் + 16 தளங்கள், பிளாக்-F ஸ்டில்ட் + 9 தளங்கள் - 732 குடியிருப்புகள் கொண்ட பலமாடி தொகுப்பு குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் உத்தேசத்திற்கு திட்ட அனுமதி காலம் நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது - தொடர்பாக அரசு கடிதம் மற்றும் மனுதாரர் கடிதம் மீது பெறப்பட்டுள்ளது தொடர்பாக விரிவான குறிப்பு அனுப்ப கோருதல் - சம்பந்தமாக.

பார்வை:

1. அரசு கடிதம் எண்.7377/UD4-3/2019-1, நாள்.16.04.2019
2. மனுதாரர் M/s.Marg Properties Limited கடிதம் நாள்.03.04.2019
3. நகர் ஊரமைப்பு ஆ[illegible]ணயர் அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.319[illegible]/2010/சிபி, நாள்.08.03.2011 (தொழில் நுட்ப இசைவு)
4. உறுபபினா் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் முன்னிலைக் கடிதம் ந.க.எண்.661/2010/மாஉதிகு, நாள்.20.04.2011 (திட்ட அனுமதி)
5. செயல் அலுவலர், திருப்போரூர் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.122/2010 (கட்டிட உரிமம் எண்.01/2011-2012), நாள்.05.05.2011 (கட்டிட அனுமதி).

-----

மேற்காண் பொருள் தொடர்பாக, மேற்படி உத்தேசத்திற்கு பார்வை 3ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணைக் கடிதம் மூலம் தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டு, பார்வை 4-ல் சுட்டிய உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் முன்னிலைக் கடிதம் மூலம் திட்ட அனுமதி வழங்கப்பட்டு, பார்வை 5-ல் சுட்டிய செயல் அலுவலர், திருப்போரூர் ஊராட்சி அவர்களின் கடிதம் மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு நிலையில் கட்டப்பட்டு வரும் பலமாடி கட்டுமான உத்தேசத்திற்கு திட்ட அனுமதி கால நீட்டிப்பு கோரி பார்வை 2-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் இவ்வலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டும், பார்வை 1-ல் சுட்டிய அரசுக் கடிதம் மூலம் மனுதாரர் கோரிக்கை கடிதம் இணைத்தும் பெறப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

மேற்படி அரசு கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பார்வை 1-ல் சுட்டிய அரசு கடிதத்துடன் இணைத்துப் பெறப்பட்ட மனுதாரர் கடிதம் நகல் மற்றும் இணைப்புகள் இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகின்றது. மேற்படி மனுதாரர் கோரிக்கை தொடர்பாக விரிவான குறிப்பினை அரசுக்கு அனுப்ப ஏதுவாக அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

இணைப்பு
பார்வை 1-ல் சுட்டிய அரசு கடிதம்
மற்றும் இணைப்புகள் நகல்.

03/05/19

நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ)-க்காக

3/5/19

பெறுநர்
உறுப்பினர் செயலர் (பொ),
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்.

நகல்
M/s.Marg Properties Ltd,
4/318, Rajiv Gandhi Salai,
Kottivakkam,
Chennai-41.

Scanned by CamScanner